




திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு, முன்னாள் அமைச்சர் கழக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு மாலை அணிவித்து, சமூக நீதிநாள் உறுதிமொழியேற்றார். உடன் முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், க.சௌந்தரராசன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், காலேஜ் ரவி, சி.சண்முகம், ஏ.ஏ.ஆறுமுகம் உட்பட பலர் உள்ளனர்.




### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# சமூக நீதி நாள் தந்தை பெரியார் 148ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா!

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து உறுதிமொழியேற்றார்!

திருவண்ணாமலை, செப். 18-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 148ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவிற்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு தலைமையேற்று, தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து, சமூக நீதி நாள் உறுதிமொழியேற்றார்

17.09.2026 வியாழக்கிழமை காலை சரியாக 10.00 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த நாள் விழா, சமூக நீதி நாள் உறுதியேற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்டக் கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட துணைச் செயலாளர் மு.பெ.கிரி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவிற்கு முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு தலைமையேற்று, தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர்ரு

• “பிறப்பொக்கும் எல்லா உயர்க்கும்” என்ற அன்பு நெறியையும் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்!

• சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

• சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!

• மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!

• சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

என முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு உறுதிமொழியை வாசிக்க, நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் உறுதிமொழியையேற்றுக் கொண்டனர்.

விழாவில் மாநில தொ.மு.ச. பேரவைச் செயலாளர் க.சௌந்தரராசன், துணை மேயர் சு.ராஜாங்கம், மாநில அமைப்புசாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, மங்கலம் பிரபாகரன், ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், பாலமுரளி கிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், இரா.அன்பரசு பி.கே.ஏ.அருண், கற்பகம் சரவணன்,


மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கு.பாலசுப்பிரமணி, பகுதி கழகச் செயலாளர்கள் அ.கோவிந்தன், ந.சீனுவாசன், சி.சண்முகம், நகர நிர்வாகிகள், மு.கருணாமூர்த்தி, இல.குணசேகரன், அ.கண்ணன், ஹக்கிம்சேட் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், செல்வம்பிரகாஷ், ஆ.தே.முருகையன், லக்கி அரவிந்த், டீக்கடை சீனுவாசன், எம்.ஆர்.கலைமணி, அ.திவாகர், ஹச்.சீனு, இராயல்.தியாகு, ஜீவிதா வைத்தியலிங்கம், பச்சையம்மாள் யேசு, வழக்கறிஞர்கள் மு.வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி, பா.தங்கராஜ், நகர அமைப்பாளர்கள் எம்.குணாளன், சச்சின்.சபரி, சாம்.ரகுநாத், பா.முர்பத், தொ.மு.ச. துரைராஜ், தாமோதரன், டி.கே.மனோகரன், துரைசாமி, இலட்சுமணன், ஆர்.மனோகரன், சிவக்குமார், ஸ்ரீதர் மற்றும் எழில்மாறன், ம.செந்தில், மூ.காமேஷ், க.முரளி, சோ.கீழ்நாச்சிப்பட்டு இரா. அர்சுணன், அருண், சதீஷ், சக்திகணேஷ், டிராவல்ஸ் சுரேஷ், காமராஜ், அஸ்வின், பிரதீப் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.‘

பின்னர் தமிழ் மாணவர் மன்றம் சார்பில், தந்தை பெரியார் பிறந்த நாள் விழா, உறுதியேற்பு விழாவிற்கு வருகை தந்த கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு, இனிப்புகள் வழங்கி, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வாழ்த்துக்கள் கூறினார்.

### மக்களிடம் உங்கள் திரைப்படத்திற்கு “பிளாக் டிக்கெட்”விற்று கொள்ளை அடிப்பது போல்

# மின்கட்டணத்தில் கொள்ளையடிப்பது நியாயமா CMsir?

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!



நெல்லை,செப்.18-

கடந்த 5 ஆண்டு கால தி.மு.க.ஆட்சியில் தமிழ் நாட்டில் மின்தடையோ, மின்வெட்டோ,அதிக மின் கட்டண உயர்வோ இல்லாமல் புதிதாக காற்றாலை மற்றும் சூரிய மின்திட்டம் மூலம் சுமார் 15,000MW புதிய மின் உற்பத்தியும் செய்யப்பட்டு தமிழ் நாட்டை மின்மிகை மாநிலமாக மாற்றிய பெருமைக்குரியவர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

தி.மு.க.ஆட்சியில் வீட்டு மின்கட்டணம் 1 முதல் 400 யூனிட் வரை யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 2.35 என்பதை த.வெ.க. ஆட்சியில் இருமடங்காக ரூபாய் 4.70 என உயர்த்தி உங்களுக்கு வாக்களித்த ஏழை,எளிய மக்களிடம் உங்கள் திரைப்படத்திற்கு பிளாக் டிக்கெட் விற்று கொள்ளை யடிப்பது போல் மின்கட்டணத்திலும் கொள்ளையடிப்பது நியாயமா CMsir?

தற்போது தமிழ்நாட்டில் காற்றாலை மற்றும் சூரிய மின்திட்டம் மூலம் பல ஆயிரம் MW மின்சாரம் குறைந்த விலையில் தயாராக இருப்பதை மின்வாரியம் (Power Purchase Agreement) மூலம் வாங்குவதற்கு அரசு அனுமதியளிக்காமல் தொடர் மின்வெட்டு மூலம் மக்களை இரவு தூங்க விடாமல் தவிக்க விட்டு,விட்டு இன்பச் சுற்றுலா சென்று விட்டீர்களே CMsir ?

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி செயற்கை மின் தட்டுப்பாட்டை உருவாக்கி முதல்வரின் “ரெட்டி கேங்” (விஷ்ணு, சுஜய், அணில் மற்றும் சுனில் ரெட்டிகள்) மூலம் மணல் கனிம வளங்களை பல ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்றது போல், மின்வாரியத்தையும் அதானிடம் விற்க துடிப்பது தான் தூய ஆட்சியின் லட்சணமா CMsir?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# பெரியார்: சிந்தனைச் சிறகை விரிக்கச் செய்த அறிவாசான்!

சுற்றி நடக்கும் அநீதிகளைப் பார்த்து "இது வழக்கம்போல நடப்பது தானே" என்று அமைதியாகக் கடந்து போகாமல், "ஏன்? எதற்கு? எப்படி?" என்று கேள்வி கேட்கத் துணிந்த உரிமைக்குரல் தான் “பெரியார்”.

அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் உரியவர் அல்ல; சுயமரியாதையும் பகுத்தறிவும் கொண்ட ஒவ்வொரு தலைமுறையின் சிந்தனையிலும் வாழும் ஒரு கருத்து வடிவம்.


"நான் சொல்வதையும் அப்படியே நம்பாதே; உன் அறிவுக்கு எது சரியென்று படுகிறதோ, அதை மட்டுமே ஏற்றுக்கொள்" என்று உரக்கச் சொன்ன ஒப்பற்ற ஆசிரியர் அவர்.

தன்னை எந்த இடத்திலும் தலைவனாகவோ, புனிதனாகவோ நிலை நிறுத்திக் கொள்ள விரும்பாத ஒரே தலைவர் அவர். உலகிலேயே தன்னை விமர்சிக்கவும், தன் கருத்துக்களை மறுபரிசீலனை செய்யவும் சக மனிதர்களுக்கு அழைப்பு விடுத்த மாபெரும் சிந்தனையாளர்.

பிறப்பின் அடிப்படையில் மனிதர்களைப் பிரித்து வைத்த பாகுபாட்டுச் சுவர்களைத் தகர்த்தெறிந்தவர்.

எளிய மக்களுக்கும், விளிம்புநிலை மாணவர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில், "கல்வியே உரிமை" என்று குரல் கொடுத்தவர்.

பெண்களுக்கு சொத்துரிமை, மறுமண உரிமை, கல்வி, வேலை வாய்ப்பு என அனைத்துத் தளங்களிலும் சரிநிகர் சமானம் வேண்டும் என்று ஒரு நூற்றாண்டுக்கு முன்பே களமிறங்கிய தொலைநோக்குப் பார்வையாளர்.



மனிதன் எந்தச் சூழலிலும் தன்மானத்தையும் சுயமரியாதையையும் அடகு வைக்கக் கூடாது என்ற உணர்வை விதைத்தவர்.

இன்றைய டிஜிட்டல் உலகில் எத்தனையோ தகவல்கள், போலிச் செய்திகள், மூடநம்பிக்கைகள் நம்மைச் சூழ்ந்துள்ளன. அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அறிவியல் மனப்பான்மையோடு (Scientific Temper) பகுத்தாய்ந்து முடிவெடுக்கும் சிந்தனைத் திறனே பெரியாரின் தத்துவம்.

பெரியார் என்பது வெறும் உருவமல்ல; அது சிந்தனைச் சுதந்திரம். அநீதியைக்கண்டுபொங்கும்துணிச்சலும், சக மனிதனைச் சமமாக நடத்தும் பண்பும்தான் பெரியாரியம்.

நீ உன் சுயசிந்தனையோடு வாழ்கிறாயா அப்படியென்றால் உன் எண்ணங்களில் பெரியார் வாழ்கிறார்!

வாழ்க பெரியார்!
வளர்க பகுத்தறிவு!
வெல்க திராவிடம்!

**முனைவர் காந்தி பாபு**

### இராயபுரம் 49வது வட்டத்தில்

## அண்ணா பிறந்த நாள் விழா!

சென்னை, செப்.18–

இராயபுரம் கிழக்கு பகுதி49 வட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118 வது பிறந்தநாள் விழா வட்டக் கழக பொறுப்பாளர். க. கலைசெல்வன் ஏற்பாட்டில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வே.சிவக்குமார் முன்னிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது கழகக் கொடி ஏற்றி, பொதுமக்கள் 300 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தா.இளைய அருணா, ந.மனோகரன், பி.டி பாண்டி செல்வம், பி.சேகர், கு.சுந்தர், வழக்கறிஞர் ஜெ.புருஷோத்தமன், என்.கிருஷ்ணன், எல், சீனிவாசன், கட்பிஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, அ. வேணுகோபால், என்.ஏழுமலை, சி.லிங்கேசன், பி.டி.பா.கதிரவன் கே.பாலகிருஷ்ணன், எம். பழனி, அ.குமார், கே.ஆர். கோபிநாத், ஜி.கோதண்டன், த.கு. பன்னீர் செல்வம், ஏ. கதிரவன்,ப.சுதாகர், ஜி.விநாயகம், எஸ்.ஈஸ்வரன், ஆர்.பாரதிதாசன், எம்.தங்கராஜ், கே. பாரத், ப.மோகனசுந்தரம், எம்.கன்னியப்பன், வி.கலைச் செல்வன், எஸ். முத்துகுமார், எஸ்.சங்கர், ஜெயபால் ம.வே. வேலு, வி.சின்னசாமி, பிளம்பர் தர்மன், கே.கிருபாகரன், மிட்டாய் மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

